ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2120/3 - 2019 අප්‍රේල් මස 22 වැනි සඳුදා - 2019.04.22

*2120/3 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்**

*முத்திரை*

*மைத்திரிபால சிறிசேன.*

*இலங்கையில் அவசரகாலநிலைமை நிலவுவதன் காரணமாக, பொதுமக்களின் பாதுகாப்பு, நாட்டின் அமைதியைப் பாதுகாத்தல், மக்கள் வாழ்வுக்கு அத்தியாவசியமான வழங்கல்கள் மற்றும் சேவைகள் என்பவற்றைப் பேணுவதற்காக இவ்வாறு செய்தல் உசிதமானதாகவுள்ளதென நான் அபிப்பிராயப்படுவதனால் ;*

*சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் தேசிய அரச பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, இப்பிரகடனத்தின்மூலம், அக்கட்டளைச் சட்டத்தின் பாகம் II இன் ஏற்பாடுகள் இரண்டாயிரத்திப்பத்தொன்பதாம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் தேதியன்றும் அதற்குப்பின்னரும் இலங்கை பூராகவும் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன் என அறிவீராக.*

*இரண்டாயிரத்திப்பத்தொன்பதாம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 22 ஆந் தேதியன்று கொழும்பில் வெளிப்படுத்தப்பட்டது.*

*அதியுத்தமனாரின் ஆணைப்படி,*

*உதய ஆர். செனெவிரத்ன,*
*சனாதிபதியின் செயலாளர்.*

1A - G 29753 — 382 (2019/04) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*